1993 டிசம்பர் 30]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்தி, கூட்டுறவுச் சங்கங்களில் ஒப்படைப்பார்களேயானால், நிதிநிலைக்கேற்பவாறு அது ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 87, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

87—

முத்துப்பேட்டையிலிருந்து வேளாங்கண்ணி வரை உள்ள சாலையை அகலப்படுத்துதல்.

*14015—திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், முத்துப்பேட்டையில், இருந்து வேளாங்கண்ணி வரை உள்ள குறுகிய தார்ச்சாலையை அகலப்படுத்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதேமில்லத் மாவட்டம் துவக்கப்பட்ட பின்னர், அது மாவட்ட தலைநகரமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தினுடைய தலைநகரச் சாலை மிகவும் பழுதடைந்த நிலையிலும், போக்குவரத்துக்கு லாயக்கற்ற முறையிலும் தொடர்ச்சியாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்திற்கு, முன்புகூட புதிய சாலைகள் தனியார் மூலமாகப் போடப்படுமென்றெல்லாம் அரசுக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு அதற்கான செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆகையால் உடனடியாக அந்தச் சாலைகளைப் போடுவதற்கு அரசு மீண்டும் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1993 டிசம்பர் 30

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற சாலை 4 பகுதிகளைக் கொண்ட சாலையகக இருக்கிறது. இச்சாலையை மேம்படுத்துவதற்குச் சுமார் 14 கோடி ரூபாய்க்கு மேலே செலவாகும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் தற்போது பகுதி-2 திட்டத்தின் கீழ் எந்தவிதமான திட்டமும் இல்லை என்று நான் குறிப்பிட்டேன். இந்தச் சாலையை மேம்படுத்து வதற்குத் தனியாரிடத்தில் ஒப்படைக்கின்ற பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே, அரசால் ஏற்கனவே பரிசீலனை செய்யப் பட்டு, இதற்காக பம்பாயில் இருக்கிற ஒரு தனியார் நிறுவனத் துடன் நம்முடைய அரசு தொடர்பு கொண்டுள்ளது. அவர் களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உத் தரவு வழங்கியிருக்கிறார்கள். நாகை-காயிதே மில்லத் மாவட் டத்தை முன் உதாரணமான மாவட்டமாக எடுத்து, சாலைகளை ஒப்படைத்து, பணிகளை மேம்படுத்தலாம் என்று ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இன்னும் நம்முடைய அரசோடு தொடர்பு கொள்ளவில்லை. நாங்கள்தான் தொடர்பு கொண்டு இருக்கிறோம். அவர்களை வரவேண்டும் என்று சொல்லி இருக்கின்றோம். அவர்களும் நிதி ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, நிதி ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகின்றபோது இந்தத் திட்டம் அரசினுடைய பரிசீல னைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஆக்கப்பூர்வமாகச் செயல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல இந்தச் சாலைகளையெல்லாம் அகலப்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும் கூட, போக்குரவரத்து வசதிக்கு ஏற்ப மேம்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித் திருக்கிறது. ஆகவே, இப்போது வெள்ளத்தால் பல்வேறு சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறிந்திருக்கிறது. நிவாரணப் பணிகளை மக வேகமாக முடுக்கி விட்டிருக்கிறோம். தொடர்ந்து நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு எல்லாச் சாலைகளையும் சீர் படுத்துவது போல் இந்தச் சாலையும் சீர்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர். அவர்களே, ஏற்கனவே, பழுதடைந்த சாலைகளைச் செப்பனிட அரசு ஆவன செய்தாலும், சமீபத்திலே பெய்திருக்கிற கடும் புயல் மழையின் காரணமாக முற்றிலும் இந்தச் சாலைகள் எல்லாம் சீரழிந்த நிலையிலே உள்ளன. தற்காலிகமாகச் செப்பனிடுவதற்கு அரசு ஏதாவது நிதிகளை ஒதுக்கியுள்ளதா? ஆமெனில், அதை உடனடியாகச் செய்வதற்கு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பேட்ச் ஓர்க்கையாவது முடிப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1993 டிசம்பர் 30]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம், பெருமழையின் காரணமாகத் தமிழகம் முழுவதும் இருக்கின்ற அனைத்துச் சாலைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அரசு நன்றாக அறியும். ஏறத்தாழ 196 கோடி ரூபாய்க்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய அரசு மத்திய அரசிடத்திலே தெரிவித்திருக்கிறது. ஆனால் நிதி ஆதாரங்கள்தான் அங்கிருந்து வரவில்லை. ஆனால் நம்மைப் பொறுத்த மட்டிலே அவர்கள் ஓரளவுக்கு உதவி செய்தாலும் நமக்கு நிறைய தேவையிருக்கிறது. பாதிப்பு என்பது ஒரேயடியாக மாநிலம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் தத்தம் தொகுதியிலே ஏற்பட்டிருக்கிற இழப்பினை இந்த அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு ஆய்வினை எடுத்து கிட்டத்தட்ட 196 கோடி ரூபாய்க்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று நாங்கள் மதிப்பிட்டு நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில், உடனடியாக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு முதலிலே 5 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். தற்போது 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் இந்த வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு இப்போது சில இடங்களிலே பேட்ச் ஒர்க் போடுகிறோம். ஆனால் தொடர்ந்து மழை வந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் தொடர்ந்துக் பணி செய்ய முடியவில்லை. ஏனென்றால், பேட்ச் ஒர்க் செய்து, மறுபடியும் மழை வந்தால் அந்தச் சாலைகள் பழுதுபட்டுப் போகும். இந்த மாத இறுதிக்குள் மழைக் காலம் முடிந்துவிடும் என்று நினைக்கிறோம். தற்போது பேட்ச் ஒர்க் செய்யப்பட வேண்டுமென்று அதிகாரிகளை அறிவுறுத்தியிருக்கிறோம். எங்காவது, அவ்வாறு பணிகள் நடைபெறவில்லை என்றால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மழைக்காலம் முடிந்த 15 நாட்களுக்கு, போர்க்கால அடிப்படையில் நிதி ஆதாரங்களைத் திரட்டி. எப்படியும், எல்லாச் சாலைகளையும் சீரமைக்க வேண்டுமென்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு இட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளை இந்த அரசு மிக விரைவாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 88, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.